சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 14.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 112/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | இளங்கோவன் |
| தந்தை பெயர் | : | அம்மாசி |
| கிராமம் | : | திருக்கண்ணமங்கை |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 48 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் பக்கிரிசாமி என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 24.10.2009 ஆம் தேதி இரவு 9.00 மணியளவில் திருக்கண்ணமங்கை தேரடி பக்கம் சென்றபோது ஆஜர் எதிரி உட்பட 7 நபர்கள் பக்கிரிசாமி என்பவரை வம்பிழுத்து தாக்கி இத்தோடு தொலைந்து போடா என்று கூறி வெட்டினார்கள் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நான் சம்பவத்தை பார்த்ததாக வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்த்ததையும், போலீசாரிடம் விசாரணையில் கூறியதை மறைத்து எதிரி எனது ஊர்காரர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.14 18:23:50 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.